GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN
KODAIKANAL

# அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி

கொடைக்கானல் - 624 101

**தமிழ்த்துறை குறிஞ்சி மன்றம்**

மற்றும்

## கவிமுகி

பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

Kavimugi International Journal of
Tamil Research is a Peer reviewed Printed Journal

**ISSN 2950-6611**

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்விதழ்

# சங்ககால முதல் சமகாலம் வரை இலக்கியத்தில் நோக்கும் போக்கும்

**30 அக்டோபர் 2023**

பதிப்பாசிரியர்

முனைவர் **ர.மங்கையர்க்கரசி**

**அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை**

இலங்கை.

Scanned with OKEN Scanner

# பொருளடக்கம்

1. வேட்டுவச் சடங்காற்றுகையின் குணமாக்கல் தன்மைகளும் அதன் இன்றைய தேவையும்: கிழக்கிலங்கை களுவன்கேணி வேடர்களை மையப்படுத்திய ஆய்வு 001
சு.பத்திநாதன்

2. பல்லியத்தில் புதிய இசை உருவாக்கம்: ஓர் ஆற்றுகை மைய ஆய்வு 007
ர. மாக்கஸ் ஜவர்

3. வல்வை முத்துமாரி அம்மன் கோவில் இந்திர விழாவின் கலை அழகியல் வெளிப்பாடு: யாழ்ப்பாண பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 014
பிரபாகரன் பிரபுதாஸ்

4. கம்பன் கண்ட வில்லின் செல்வன் 019
முனைவர்.ர.மங்கையர்க்கரசி

5. கவிஞர் சிற்பியின் கவிதைகளில் அடித்தளத் தொழிலாளர்கள் நிலையும் - மேம்பாடும் 024
முனைவர் அ. பீட்டர்ராஜ்

6. குறுந்தொகை காட்டும் தொழில் 034
முனைவர் பொ. அமுதா

7. நெடுநல்வாடையில் கட்டடக்கலை 037
முனைவர் வே.வளர்மதி

8. முல்லைவாணன் கவிதையில் இயற்கை 043
ப.இளம்பரிதி

9. சங்ககாலத் தமிழ் வாணிகர் 048
முனைவர்.ஜோ.பிரின்ஸ்

10. பொருநராற்றுப்படையில் நிலவியல் கூறுகள் 052
முனைவர் கி. மலர்விழி

11. தமிழில் தலித் பண்பாடு - அறிமுகம் 056
முனைவர் க.தங்கராஜ்

12. தமிழ் இலக்கியங்களில் அறவியல் சிந்தனைகள் 059
சை. ஜாபர்

13. அம்பை சிறுகதையில் உளவியல் சிந்தனைகள் 061
க.பாரதி

14. சீவகசிந்தாமணியில் கலைத்திறன்கள் 064
கல்யாணசுந்தரம் கி

15. பண்டைத்தமிழரின் அறிவுக்கருவூலம் - முல்லைக்கலி 067
முனைவர் ஆ. தேவ்மாலா,

16. கடலோடி ஒரு பார்வை 070
முனைவர் க. லதா,

17. சங்க நூல்களில் ‘பாவை’ பற்றிய பார்வை 072
முனைவர் இரா.பொன்னி

Scanned with OKEN Scanner

மலர் 2 இதழ் 6
ISSN 2950-6611

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research

# பண்டைத்தமிழரின் அறிவுக்கருவூலம் – முல்லைக்கலி

முனைவர் ஆ. தேவ்மாலா,
எம்.ஏ., எம். ஃபில்., பி.எச்டி., யு.ஜி.சிநெட்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாத்திமாக்கல்லூரி, மதுரை,
evfatima@gmail.com , 9442410364

## முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை கலிப்பாவகையில் அமைந்த பாடல்களின் தொகுப்பாதலால் கலித்தொகை என்னும் பெயர் பெற்றது. இந்நூலினைக் **"கற்றறிந்தார்ஏத்தும்கலி"** எனவும் **"கல்வியலார் கண்டகலி"** எனவும் அறிஞர்கள் பாராட்டிக் கூறியுள்ளனர். சோழன் நல்லுருத்திரனால் பாடப்பெற்ற பதினேழு முல்லைக்கலிப் பாடல்கள் இந்நூலைச் சிறப்பிக்கும் வண்ணம் இடம்பெற்றுள்ளது. இந்நூலுக்குநச்சினார்க்கினியர்உரைஎழுதிமெருகுசேர்த்துள்ளார். முல்லைக்கலிப் பாடல்கள், பண்டைத் தமிழர்கள் அறிவில் எவ்வாறு போற்றுதற்கு உகந்த வகையில் திகழ்ந்திருந்தனர் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ளன. எனவே, முல்லைக்கலியில் உள்ள பாடல்கள் வாயிலாகப் பண்டைத் தமிழர்களின் பல்துறை அறிவை வெளிக்கொணருவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆயர் வாழ்வியல்

பிற சங்க முல்லைப் பாடல்களிலிருந்து முல்லைக்கலிப் பாடல்கள் முற்றிலும் வேறுபடுகின்றன. ஆய்ச்சியின் தொழில் நிலை முல்லைக்கலியில் கூறப்பட்டுள்ளது. இதில் பெண்டிர் தொழில் நிலையில் மேம்பட்டு ஆணுக்குச் சமமாக இருப்பதைக் காணமுடிகிறது. இங்கு தலைவியாகக் காட்டப்படும் ஆயர் மகளே, மோர்விற்கும் தொழிலை மேற்கொள்வதால் இதனை **"இழிந்தோர் வாழ்க்கை என்று கூறுவாருமுளர்''1.** முல்லைக்கலிப் பாடல்களில், ஆயர்களின் காதல் வாழ்வு சித்தரிக்கப்படுகிறது. ஆயினும், பிறமுல்லைப் பாடல்களில் அமைந்தது போல் உயர்ந்த காதல் புலப்படவில்லை. ஏனைய முல்லைப் பாடல்களைக் காட்டிலும் பாடுபொருளாலும், பாஅமைப்பாலும், மாற்றம் உடைய முல்லைக்கலியுள், வினைவலரின் அன்பு வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளது.

**ஏறுதழுவும் காட்சி, வென்றுரை வாழ்த்தும் குரவை, ஏறுதழுவாதார் களத்தில் சந்திக்காமல் களவில் சந்தித்தல் என்ற அமைப்பினைக் காணும்போது இயற்கையான திணைமக்களுக்குரிய வாழ்வை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது** 2 என்பதைஅறியலாம்.

## முல்லைக்கலியின்மூலம் அறியலாகும் செய்திகள்

பண்டைத்தமிழர்கள் ஆன்மிகம், இலக்கியம், வரலாறு, வானியியல், அறிவியல் மற்றும் பகுத்து ஆராய்தல் போன்றவற்றில் சிறந்து விளங்கினர் என்பதனைக் கீழ்க்காணும் முல்லைக்கலிப்பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

## வழிபாடு

முல்லைக்கலி காட்டும் சமுதாயமக்கள் திருமால், பிரம்மன், இந்திரன், முருகன், பலராமன், சிவபெருமான் போன்ற தெய்வங்களை வழ்பட்டனர். மரவழிபாடும் இருந்துள்ளது.

> **"ஆலும்கடம்பும் அணிமார் விலங்கிட்ட**
> **மாலைபோல் தூங்கும் சினை"** 3.
>
> (முல்லைக்கலி 106 : 28 29)

என்ற பாடலடிகளைக்காணும் போது "மனித இனத்தின் மூதாதையர் பெரும்பாலும் ஏதேனும் ஒருவகையில் மரவழிபாட்டிற்காக இலங்கினர் என்பதை வரலாறு காட்டுகிறது" 4 என்பது மரவழிபாடு இருந்தது என்பதை உறுதிசெய்யும் விதத்தில் அமைந்துள்ளது. ஆனால் திருமாலையே பெரிதும் போற்றிப் பாடினர்.

சனீஸ்வரபகவான்வழிபாடு

> **"காயாம்பூங்கண்ணிக்கருந்துவர்ஆடையை**
> **ஆயனைஅல்லைபிறவோஅமரருள்**
> **ஞாயிற்றுப்புத்தேள்மகன் ?"** 5
>
> (முல்லைக்கலி 108: 12 13)

என்று முல்லைக்கலியில் ஆயமகள் ஆயமகனை நோக்கிக் கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஞாயிறு என்றால் சூரியன் என்று பொருள். **"சூரியன் அத்தி என்பவரின் மகன் என்று பவிஷ்யபுராணம் கூறுகிறது. எமன், சனீஸ்வரர் ஆகியோரின் தந்தை சூரியன் எனவும் கூறுகிறது. சூரியன் அனைத்துக்கும் மூலமானவன் என்று ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ளது"** 6. மேற்கூறிய கருத்துக்களை ஒப்பு நோக்கும் போது, சூரியனின் மகன் சனீஸ்வரன் என்பது தெளிவாகின்றது. மேலும் 'கருந்துவர்ஆடை' என்ற ஆடையின் நிறம் கறுப்பு என்று கூறப்படுவதாலும், சனீஸ்வர பகவானுக்கு உகந்தது கறுப்புநிறம் என்பதாலும், சனீஸ்வர வழிபாடு சங்ககாலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

மன்மதனுக்குப்பால்நைவேத்தியம்செய்யும்மரபு

வேதகாலக்கடவுளான காமன்மாயோனின் மகனாகக் கருதப்படுகிறான். சிறந்த கணவனைத் தனக்குத் தரவேண்டும் என்றும், தன்கணவன் தன்னைப் பிரியாமல் இருக்க வேண்டுமெனவும் காமனைப் பெண்கள் வழிபட்டுவந்தனர்.

இதனை முல்லைக்கலிபாடல் உணர்த்துகின்றது.

> **"படையிடுவான்மன்கண்ணீ,**
> **காமன் மடையடும்பாலொடுகோட்டம்புகின்"** 7
>
> (முல்லைக்கலி 109: 19 20)



Scanned with OKEN Scanner

மன்மதனுக்கு பால்நைவேத்தியம் செய்யப்பட்டதை இது எடுத்துரைக்கின்றது.

**சுபநிகழ்ச்சிகளை தொடங்கும் முன்வழிபாடு செய்யும்மரபு**

முல்லைக்கலியில் 'ஏறுதழுவுதல்' என்னும் திருமணமுறை வழக்கத்தில் இருந்தது. இதுபுனிதமான திருமண நிகழ்ச்சி என்பதால், நீர்த்துறைகளிலும், ஆலமரத்தடிகளிலும், பழைய வலியுடைய மராமரத்தின் கீழும்உறையும் தெய்வங்களுக்கு வழிபாடுகள் செய்த பின்னரே ஏறுதழுவச் சென்றனர்.

**"துறையும், ஆலமும், தொல்வலிமராஅமும்,**

**முறையுளி, பராஅய்ப், பாய்ந்தனர், தொழூஉ"** 8 (முல்லைக்கலி 101: 13 14)

என்ற பாடல் வரிகள் இதற்கு அறன் செய்வதாக அமைந்துள்ளன.

**புராணச்செய்திகள்**

ஏராளமான புராணச்செய்திகள் முல்லைக்கலியில் காணக் கிடைக்கின்றன. மகாபாரதச் செய்திகளை சங்ககால மக்கள் அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றாக

**"அம்சீர்அசைஇயல்கூந்தற்கைநீட்டியான்**

**நெஞ்சம்பிளந்திட்டு, நேரார்நடுவண்; தன்**

**வஞ்சினம்வாய்த்தானும்போன்ம் !"** 9 (முல்லைக்கலி 101: 18 20)

என்ற முல்லைக்கலி வரிகள் அமைந்துள்ளன.

சூரபத்மனை முருகன் கொன்ற நிகழ்வு மற்றும் ஊர்வசி, திலோத்தமை குறித்த செய்திகளையும் முல்லைக்கலியில் காணலாம்.

**வரலாற்றுச் செய்திகள்**

**லெமூரியாக் கண்டத்தை கடல் விழுங்கியதற்கானச் சான்று**

முதல்கடல் கோளால் பஃறுளியாறும் குமரிக்கோடும் கடலில் கொள்ளப்பட்டன. பஃறுளி ஆற்றின் கரையிலிருந்த தென்மதுரை பாண்டியன் தலைநகரமும் தலைச்சங்கமிருந்த இடமும்ஆகும் என்ற கருத்திற்கேற்ப முல்லைக்கலியில் காணப்படும் செய்தி லெமூரியாக்கண்டம் இருந்ததை உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

"மலிதிரைஊர்ந்துதன்மண்கடல்வெளவலின்

மெலிவின்றிமேற்சென்று, மேவார்நாடுஇடம்படப்

புலியொடுவில்நீக்கிப், புகழ்பொறித்தகிளர்கெண்டை,

வலியினால்வணக்கிய, வாடாச்சீர்த்தென்னவன்" 10 (முல்லைக்கலி 104: 1 4)

**"அடியிற்றன்னைவரசர்க் குணர்த்தி வடிவேலெறிந்தவான் பகைபொறாது, பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக், குமரிக்கோடுங்கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையுமிமயமுங் கொண்டு, தென்திசையாண்ட தென்னவன்"** 11 (சிலப்: கக: கஉ 22) என்பதும், **"அங்ஙனமாகிய நிலக்குறைக்கு சோழநாட்டெல்லையிலே குண்டூர்க்கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க்கூற்றமுமென்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்"** 12 என்றெழுதிய உரையிலுள்ள செய்தியும் ஈண்டுஅறிதற்பாலன. இதன் மூலம் பாண்டிய நாட்டின் தென்பகுதியை கடல்கொண்டது என்று எண்ணுவதற்கு இடமளிக்கிறது.

**சந்திரகிரகணம் குறித்த செய்திகள்**

**"வாள்வொருவானத்துஅரவின்வாய்க்கோட்பட்டுப்**

**போதரும்பான்மதியும்போன்ம்"** !13 (முல்லைக்கலி 105: 45 46)

திங்களை பாம்பு கொள்வதாக நம்பினர் என்பதை இந்தப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. கிரகணத்தைப் பற்றிஅறியவில்லை என்பதும் அறியவருகின்றது. **"கனவு காணும் போது அறிவின் குறுக்கீடு இல்லை என்பது உண்மை, ஆயினும், அறிவின் அடிப்படை உள்ளது. அதுபோலவே கற்பனையின் படைப்பிலும் நுகர்விலும் அறிவு குறுக்கிடாதிருந்தால் நன்மை பயக்கும். எனினும் அறிவு அமைந்த அடிப்படையின் மேல்தான் நல்ல கற்பனை எழவேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, சந்திரகிரகணத்தைக் குறிக்க வந்த புலவர்கள் திங்களைப் பாம்பு விழுங்கியது என்று குறித்துள்ளனர். அக்கலத்தில் ராகுகேது என்னும் பாம்புகள் சூரியனையும், சந்திரனையும் விழுங்க முயல்வதாக மக்கள் கருதியிருந்த கருத்தே அதற்குக் காரணமாகும்."** 14.

பாலிலிருந்து வெண்ணையைப் பிரித்தெடுத்த செய்தி

**"நெய்கடைபாலிற்பயன்யாதுமின்றாகிக்**

**கைதோயன்மாத்திரையல்லதுசெய்தி "15**

(முல்லைக்கலி 110: 17)

பாலைக்கடைந்து நெய்யைப் பிரித்து எடுக்கும் வழக்கம் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில், ஒருவகை மருந்திட்டு இவ்வாறு பிரித்து எடுப்பர் என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் சங்ககாலத்தில் பாலைக்கடைந்து நெய்யை பிரித்தெடுப்பதற்கு ஒருவகை மருந்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. பாலைக் காய்ச்சாமலே இயந்திரத்தின் உதவியால் அதிலுள்ள வெண்ணெயை எடுத்துவிட்டுப் பின் அப்பாலை உண்ணுவதற்கேற்ற முறையில் தேவையான அளவு புரதச்சத்து சேர்த்து விற்பனை செய்யும்முறை இன்று வழக்கிலிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Scanned with OKEN Scanner

மலர் 2 சிறப்பிதழ் 6
ISSN 2950-6611

காலனும் கூற்றுவனும் வேறுவேறு என்பதற்கானச் சான்று

"காலனும் கூற்றும்" 10 (முல்லைக்கலி105: 20)

'கூற்று' காலனின் ஏவலாளன் என்று நச்சினார்க்கினியார் குறிப்பிடுகின்றார். மேற்கண்ட கலித்தொகைப் பாடலில், காலனும், கூற்றுவனும் வேறுபட்டவராகவும், உயிர் உண்பதே இருவரின் தொழில் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பரிபாடல் ஒன்றில் கூற்றமும் ஞமனும் ஊழிமுடிவில் உயிர்உண்ணும்தொழிலைச் செய்வதாகச் சுட்டப்பட்டிருக்கின்றது. (பரி 3; 20 - 23) எமன், காலன், தூதன்" என்று நாட்டுப் புறவழக்கில் பெயர்கள் தனித்தனியாகக் குறிப்பிடப்படுவதும் இங்குக் கருதத்தக்கது.

## முடிவுரை

இன்று நாம் கண்டுள்ள மேம்பாடுகளுக்கு சங்க இலக்கியப் பாடல்கள் உறுதியான அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருந்திருக்கக்கூடும் என்பதை நாம்சங்க இலக்கியங்களை ஆராயும்போது நமக்கு ஒரு உறுதியான நிலைப்பாட்டைத் தருகின்றன. குறிப்பாக முல்லைக்கலிக் காட்டும் மக்கள் பல்துறை அறிவில் சிறப்புற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது. எனவே முல்லைக்கலி பழந்தமிழரின் அறிவுக்கருவூலம் என்றால் அதுமிகையல்ல.

## அடிக்குறிப்புகள்

1. இலக்கிய வகைமை ஒப்பாய்வு, இராசாகி.; ப. 250.
2. கருத்தும், காட்சியும், ஆண்டியப்பன்தே.; ப. 13.
3. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார் பொ. வே.; ப. 44.
4. 1994 – வதுஆய்வுக்கோவை, குலதெய்வ வழிபாட்டில் தலவிருட்சம், ப். 648.
5. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார்பொ. வே.;ப. 55.
6. சூரியசக்தி, ஜனார்த்தன்எஸ். ப். 12.
7. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார் பொ. வே.; ப. 65.
8. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார் பொ. வே.; ப. 1.
9. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார் பொ. வே.; ப. 2.
10. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார் பொ. வே.; ப. 24.
11. சிலப்பதிகாரம் மூலமும் உரையும், வேங்கடசாமிநாட்டார், ப. 22.
12. கலித்தொகை, நச்சினார்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை 1969, ப. சாருஉ.
13. கலித்தொகை, நச்சினார்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை 1969, ப. 34.
14. இலக்கியத்திறன், வரதராசன்மு., ப. 175.
15. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார்பொ. வே.; ப. 69.
16. கலித்தொகை முல்லைக்கலி, சோமசுந்தரனார்பொ. வே.; ப. 34.



Scanned with OKEN Scanner

கவிமுகி
பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research is a Peer reviewed Printed Journal
ISSN 2950-6611

பழமையான மொழி, பண்பட்ட மொழி, பைந்தமிழ் மொழி, தேனினும் இனிய தீந்தமிழ் மொழியென்றால் தமிழ் மொழிதான் என்று கூறுவது மிகையாகாது. தமிழ் எளிமையான, இனிமையான மொழியாக திகழ்கிறது. தமிழ் மொழியானது இலக்கிய மரபினைக் பிரதிபலிக்கக்கூடிய காலக் கண்ணாடியாகும். தமிழ் இலக்கியங்கள் அன்றைய மக்களின் நிலவியல் சார்ந்த சூழலைக் கையகப்படுத்தி இயற்கையைப் பேணி பாதுகாத்து அதனோடு இயைந்த வாழ்வியலைக் கற்றுக்கொடுத்தது. அதுமட்டுமின்றி, இம்மொழி இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஆட்சிமொழியாகவும், உலகமொழியாகவும் திகழ்கின்றது. இன்றையக் காலச்சூழலில் பல்வேறு நாடுகள் தமிழ்மொழியைச் சிறார்களுக்குக் கற்றுக்கொடுக்கின்றனர். ஆய்வாளர்கள் தமிழ் இலக்கியத்தைப் பல்வேறு தளங்களில், பலகோணங்களில் ஆய்வுக்குட்படுத்துகின்றனர்.

இவ்வுலகவாழ்வுக்கே இலக்கிய – இலக்கணம் வகுத்த வண்டமிழ் மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது. இலக்கண அமைப்பில் புதுமை கொண்ட பெருமை தமிழுக்கே உரியது. இவ்விலக்கணம் தொல்காப்பியரின் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று இயலின் மூலமாகத் தமிழ் எழுத்துக்களின் முக்கியத்துவத்தையும், போற்றுதலுக்குரிய வாழ்வின் ஒழுக்கத்தையும் எடுத்துரைக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டது. தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் காப்பியங்களும் தமிழின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. அவ்வாறே, பன்னிருதிருமுறைகள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தங்களும் பக்திமணம் பரப்புகின்றன. நல்வழி, மூதுரை, உலகநீதி, கொன்றைவேந்தன் போன்ற நீதிநெறி நூல்களும் மக்களுக்கு அறவழிகாட்டிகளாய்த் திகழ்கின்றன.

இவ்வாய்விதழ் சங்ககாலம் முதல் சமகாலம் வரை மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும், கலைச் செயற்பாடுகளையும் இலக்கியங்கள், கள ஆய்வுவாயிலாக ஆராயும் விதமாக படைக்கப்பட இருக்கிறது. மேலும், சமூகங்களின் உள்ளத்து உணர்வுகளையும், கற்பனை வளத்தையும், படைப்பாற்றல்களையும், திறன்களையும் ஆராய்ந்து இவ்விதழுக்குச் சமர்ப்பிக்கலாம். காலனிய நீக்கம், அறிவின் அதிகாரவிமர்சனம், படைப்பிலக்கியமையம், ஆற்றுகைமையம், விளிம்புநிலைப் பார்வை, பன்மைத்துவ அணுகுமுறை, பெண்ணியல் சிந்தனை, சூழலியல் நட்பு ஆகிய எண்ணக்கருக்களையும், புதியகோட்பாட்டு அணுகுமுறைகளையும் பகுப்பாய்வு செய்து இவ்வாய்விதழில் சமர்ப்பிக்கலாம்.

ஆய்வாளர்களது ஆய்வுக்கட்டுரைகள் பன்னாட்டளவில் மதிப்பீடுச் செய்யப்படும். மதிப்பீடுச் செய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை ஆசிரியர்குழுவின் மேற்பார்வையில் ஆய்வாளர்களின் கவனத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டு, பின்னர் அதன் திருத்தங்களைச் சரிசெய்து ஆய்வுநூலாக வெளியிடப்படுகின்றது.

இது இலங்கையில் இருந்து வருடம் இரு இதழ்களாக (ஆனி, மார்கழி) வெளியிடப்படும் மீளாய்வுச் (Refereed) சஞ்சிகையாகும். இது துறைசார் உள்நாட்டு, வெளிநாட்டுப் புலமையாளர்களால் மீளாய்வுச் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றது. ISSN: 2950-6611.

Scanned with OKEN Scanner